
# கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவராண்டு 2033-34 (சித்ரபானு ஆண்டு) மார்கழித் திங்கள்



மயில் நடமிடும் முருகன் சிற்பம் - சிதம்பரம்

கல்வெட்டு இதழ் : 59 (2003 சனவரித் திங்கள்) விலை ரூ. 2-00

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே..... பக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | ... 1 |
| 1 | இருங்காட்டுக்கோட்டை - ஓர் ஆய்வறிக்கை — அர. வசந்தகல்யாணி | ... ... 2 |
| 2. | முற்காலப் பாண்டியர் காலத்து மடைகளின் அழிவும் சில புதிய கல்வெட்டுகளும் — முனைவர் வெ. வேதாசலம் | ... ... 5 |
| 3. | Report on the Condition and Restoration of an Oil Painting brought from Ramalingavilasam Palace Museum, Ramanathapuram — M. S. Ashok Deen | ... ... 11 |
| 4. | Korkai and Iron Smelting — S. Ramachandran | ... ... 15 |
| 5. | சித்திரமேழிப்பிள்ளை கல்வெட்டு கண்டுபிடிப்பு — ச. கிருஷ்ணமூர்த்தி | ... ... 18 |
| 6. | தலைச்சங்காடு கல்வெட்டுகள் — கோ. முத்துசாமி | ... ... 20 |
| 7. | விக்டோரியா ஜுப்லி ரோடு — இர. ஜெயராமன் | ... ... 21 |
| 8. | நென்மேலிக் கல்வெட்டுகள் — முனைவர் ஆ. பத்மாவதி | ... ... 22 |
| 9. | ஆந்தகுடி சோமேசுவர சுவாமி கோயில் கல்வெட்டுகள் — இர. ஜெயராமன் | ... ... 26 |
| 10. | மயில்மீது நடனம்புரியும் முருகன் சிற்பம் — ச. கிருஷ்ணமூர்த்தி | ... ... 31 |
| 11. | துறையின் நிகழ்காலச் செயல்பாடுகள் | ... ... 33 |



கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக்
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,** இ.ஆ.ப.
**ஆணையர், தொல்லியல் துறை**

3-ஆவது குறுக்குச் சாலை
தரமணி
சென்னை - 600 113
28 - 2 - 2003

# பதிப்புரை

ஒரு நாட்டின் வரலாற்று ஆய்வுக்கு முதன்மையான ஆதாரங்களாக அமைவன வரலாற்றுச் சின்னங்கள், கல்வெட்டுகள், அகழாய்வுகளில் கண்டறியப்படும் கலைப்பொருள்கள், காசுகள் மற்றும் முத்திரைகள் முதலியன ஆகும். இந்திய நாட்டின் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் அதிகமாகக் கல்வெட்டுகளும், கலைச் சின்னங்களும் உள்ளன. தமிழகத்தில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடித் தடத்தின் கீழும் ஏதாவது ஒரு கலைச் சின்னம் தட்டுப்படுகிறது என்றே கூறலாம். இத்தகைய தொல்லியல் ஆதாரங்களைக் கண்டறிந்து அவற்றின் வரலாற்றை மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஈடுபட்டுள்ளது.

தொல்லியல் துறையின் காலாண்டிதழான கல்வெட்டு 59-ஆம் இதழில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கள ஆய்வுச் செய்திகளுக்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளது. இவையனைத்துமே தொல்லியல் துறையின் அலுவலர்கள் மற்றும் பயிற்சி மாணவர்களின் கற்றறிவு, பட்டறிவு ஆகியவற்றின் வெளிப்பாடுகள் ஆகும். துறையின் செயல்பாடுகளில் மூப்பின் அனுபவ முதிர்ச்சியும் இளமையின் செயல்துடிப்பும் இணைந்து இலங்குகின்றன என்பதனை இவை உணர்த்துகின்றன.

தொல்லியல் - கல்வெட்டியலில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் மேலும் ஊக்குவிக்கின்ற வகையில் அமைகிற கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,** இ.ஆ.ப.

# 1 இருங்காட்டுக் கோட்டை-ஓர் ஆய்வறிக்கை

**அர. வசந்தகல்யாணி**
கல்வெட்டாய்வாளர்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம் இருங்காட்டுக் கோட்டை கிராமமும் அங்குள்ள சிவன்கோயிலும் ஆய்வு செய்யப்பட்டன.

**கட்டடம்**

'அபினேஸ்வரி உடனுறை அசிதாரண்ய சாலபுரீஸ்வரர்' என்று இன்று அழைக்கப்படும். சிவன் கோயில் முற்றிலும் அழிந்த நிலையில் காணப்படுகின்றது. ''இருண்ட காட்டுக் கோட்டை'' என்பதே ''அசித ஆரண்ய சாலபுரி'' என வட மொழியில் வழங்கப்படுகிறது. கருங்கல்லால் கட்டப்பட்ட எளிமை யான அதிட்டானத்திற்கு மேல் செங்கற்களால் ஆன கருவறை, சிறிய அர்த்தமண்டபம், அம்மன் சன்னதி ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. அதிட்டான உபபீடம் போல் அதிட்டான வர்க்கங்கள் இன்றி உபபீடம், ஜகதி, பட்டி என எளிய உறுப்பு களைக் கொண்டுள்ளது. இந்த அதிட்டானப் பகுதிக்கு மேல் உத்தரப்பகுதி வரை செங்கற்களால் அமைந்து அதற்கு மேலுள்ள பிரஸ்தரம் முதலான விமானப்பகுதிகள் சிதைந்து விட்டன. சுவர்ப் பகுதியில் எளிய பஞ்சதேவகோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. தேவகோட்டத்திற்கு மேலே சாலை வடிவிலான அமைப்பு செங்கற் களாலேயே காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே கருவறையில் நான்கு அரைத் தூண்களும், அர்த்தமண்டபத்தில் இரண்டு அரைத் தூண் களும் உள்ளன. கருவறை லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் நீர் வெளியேறக் கருங்கல் நாளம் அதிட்டானப்பகுதியில் உள்ளது. மேலும் சதுரம், எண்பட்டை, சதுரம் என்ற அமைப்புடனான நான்கு தூண்கள் கருவறையின் பின்னே கிடத்தப்பட்டுள்ளன.

**சிற்பம்**

கருவறையில் வைக்கப்பட்டிருந்த ஆவுடையாருடன் கூடிய சிறிய லிங்கம் சிதைந்த கோயிலுக்கு முன்னே தற்போது வேயப் பட்டுள்ள கூரைக் கட்டடத்தில் பாதுகாப்பாக, வழிபாட்டிற்கென வைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னே நந்தியின் உருவமும்

உள்ளது. லிங்கமும் நந்தியும் சோழர் காலப்பாணியில் உள்ளன. லிங்கத்தின் ருத்ரபாகத்தில் பிரம்மசூத்ரம் காணப்படுகின்றது. இவ்விரண்டு கற்சிற்பங்கள் தவிரக் கருவறையின் பின்னே ஒரு ஜேஷ்டா சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

**ஜேஷ்டா**

இச்சிற்பம் மணற்கல்லால் செய்யப்பட்டுள்ளது. எனவே நீண்ட வரலாற்றுப் பாதையில் இயற்கைச் சீற்றங்களால் மிகவும் தேய்ந்து சிதைவுற்றுள்ளது. ஜேஷ்டை தனியே பத்ர பீடத்தின் மேல் இரு கால்களையும் பக்கவாட்டில் பரப்பிய நிலையில் பெருத்துச்சரிந்த வயிற்றுடன் அமர்ந்துள்ளாள். தலையிலுள்ள கரண்ட மகுடமும், முகமும் மிகவும் தேய்ந்து விட்டதால் அதன் அழகினை முழுதுமாகக் காண இயலவில்லை. எனினும் பருத்த முகமும் அதில் உருண்டையான கண்களும் ஓரளவு எழிலை உணர்த்துகின்றன. மார்பில் கச்சை காணப்படவில்லை. தடித்த சவடி எனும் கழுத்தணி கழுத்தை அலங்கரிக்கின்றது. தேவிக்கு இரண்டு கரங்கள் காட்டப்பட்டுள்ளன. அவை இரண்டும் தொடை மீது வைத்த நிலையில் உள்ளன. மேற்கையில் கேயூரமும், முன் கையில் தடித்த முன் கை வளையல்களும் காணப்படுகின்றன. பொதுவாக ஜேஷ்டாவின் இருபுறமும் அவளது மகனும் மகளுமான நந்திதேவர் - அக்னிமாதா காட்டப்பட்டிருப்பர். மூவரும் ஒரே பீடத்திலோ, தனித்தனிப் பீடத்தில் ஒரே கல்லிலோ காட்டப் படுதல் மரபு. ஆனால் இங்கு அவர்கள் இருவரும் இன்றி ஜேஷ்டா மட்டும் தனித்துக் காட்டப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது. இச்சிற்பத்தின் கலையழகின் அடிப்படையில் இதனைக் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த பிற்காலப் பல்லவர் காலத்ததாகக் கொள்ளலாம்.

**காளி**

இவ்வூரிலுள்ள மற்றொரு பெரியகுளத்தின் கரையில் காளியின் கற்சிலை காணப்படுகின்றது. காளி, அழகிய ஜ்வாலா மகுடம் அணிந்துள்ளாள். மகுடத்தின் நடுவே மனிதத்தலை காட்டப்பட்டுள்ளது. காதுகளில் மகரபத்ரகுண்டலங்கள் காணப் படுகின்றன. மார்பில் கச்சு காணப்படுகின்றது. நான்கு கரங் களுடன் காட்டப்பட்டுள்ள இத்தேவியின் மேலிரு கரங்கள் உடுக்கை, பாசம் ஏந்திக் கீழிரு கரங்கள் சூலம், கபாலம் தாங்கிக் காட்சியளிக்கின்றன. ஒரு காலை மடக்கி ஒரு காலைத் தொங்க

விட்டுப் பத்ரபீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டிருக்கின்றாள். இந்தச் சிற்பத்தின் கலைப்பாணியைக் கொண்டு இதனைக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

## கல்வெட்டு

சிவன் கோயிற் கருவறைப் பட்டியில் மிகவும் சிதைந்த நிலையில் ஆங்காங்கே மாற்றி வைத்துள்ள கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. இதன் மெய்க்கீர்த்திப் பகுதியைக் கொண்டு இக்கல்வெட்டு முதலாம் இராஜேந்திரன் மகனான முதலாம் இராஜாதி ராஜனுடையதாக (கி.பி. 1018-54)க் கொள்ளலாம். ''...... விஸ்வலோகத்து விளங்கமனுநெறி நின்று ....'' என்ற இச்சிறிய மெய்க்கீர்த்தி வரியே அரசனை இனம் காண வைக்கின்றது. இவனுடைய ''திங்களேர் தரு தன் தொங்கல் வெண்குடைக்கீழ்'' என்ற மெய்க்கீர்த்தியின் ''ஆறிலொன்று அவனியுள்கூறு கொள் பொருள்களும் உகந்து நான்மறையவர் முகந்துகொளக் கொடுத்து விசுவலோகத்து விளங்கமனு நெறி நின்று'' என்ற வரிகளே சிதைந்து காணப்படுகின்றன. மேலும் இங்கு 'நாங்களே இறுப்பதாக சிலாலேகைசெ..., சிலாலேகை செய்வித்தேன் .... திறைகளுமாறிலொந்[று அ]வனியுள் கூறு கொள்' என்ற சிதைந்த கல்வெட்டு வாசகங்கள் உள்ளன. கோயிலுக்கு ஏதோ ஒரு தானம் வழங்கப்பட்டுக் கல்வெட்டாக வெட்டிவைக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு வரிகளைக் கொண்டு இக்கோயில் முதலாம் இராஜாதிராஜன் காலத்திலோ அதற்கு முன்பாகவோ எடுக்கப் பட்ட சிறிய செங்கற்கோயில் என்று கருதலாம்.

# 2 முற்காலப் பாண்டியர் காலத்து மடைகளின் அழிவும் சில புதிய கல்வெட்டுகளும்

**முனைவர் வெ. வேதாசலம்**
**கல்வெட்டாய்வாளர்**
**தொல்லியல் துறை, மதுரை**

தமிழ்நாட்டின் தென்பகுதியை ஆண்ட பாண்டிய மன்னர்கள் சங்க காலத்திலிருந்தே நீர்ப்பாசனக் குளங்களைத் தோற்றுவித்துள்ளனர். குளக்கீழ் விளைந்த நெல்லைத் தென்னவன் நாட்டு மக்கள் உணவாகக் கொண்டனர் என்பதைச் சங்கவிலக்கியம் அந்நாட்டின் சிறப்புகளில் ஒன்றாகக் கூறுகிறது.[1] இதனால் பாண்டிய நாட்டில் உள்ள நீர்ப்பாசனக்குளங்கள் சில கி.பி. 300க்கு முன்பாகச் சங்ககாலப் பாண்டிய அரசர்களால் உருவாக்கப் பட்டுவிட்டன எனலாம். கி.பி. 600க்கும் 985க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்த முற்காலப் பாண்டியர்களும் தாங்கள் வெளியிட்ட செப்பேடுகளில் பூதங்களின் துணைகொண்டு பெரிய ஏரிகளைத் தோற்றுவித்ததாகப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர்.[2] இவர்கள் காலத்தில் பாண்டிய நாட்டு உட்புறமிருந்த சிறுநாட்டுப் பிரிவுகளின் நிர்வாகத்தினை மேற்கொண்ட நாடுகிழவர்களும் பல ஏரிகளைத் தோற்றுவிக்கும் பணியோடு பழைய ஏரிகளைப் புதுப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். இதனைத் தெரிவிக்கும் முற்காலப் பாண்டியர் காலத்து வட்டெழுத்து, மற்றும் தமிழ்க் கல்வெட்டுகள் பாண்டிய நாட்டில் அண்மைக் காலத்தில் பல ஏரிகளில் கண்டறியப்பட்டுள்ளன. இப்பாசன ஏரிகளிலுள்ள பழமையான மடைகளின் அழிவு பற்றியும், புதியதாகக் கண்டறியப்பட்ட சில நீர்ப்பாசன மடைக் கல்வெட்டுகள் குறித்தும், இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

## மடைகளின் அழிவு

நீர்ப்பாசனப் பணிகள் குறித்த பழமையான கல்வெட்டுகளுடன் கூடிய மடைகள் தற்போது அழிவுக்குள்ளாகி வருவது வரலாற்றுலகத்திற்கு வருந்தத் தக்க செய்தியாகும். வைகைக்கரையில் நின்றசீர் நெடுமாறன் எடுப்பித்த நீர்மதகு அழிவுக்குள்ளாகியது. அதில் பொறிக்கப்பட்டிருந்த அவனது வட்டெழுத்துக் கல்வெட்டுக் கற்பலகை, துணி துவைப்பதற்குப் பயன்படுத்தப் பட்ட கல்லாக மாறிய நிலையில் மீட்கப்பட்டுத் தற்போது அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இருப்பைக்குடிக் கிழவன் என்றழைக்கப்பட்ட இருஞ்சோணாட்டு (சாத்தூர்வட்டம்)த் தலைவனின் நீர்ப்பாசனப் பணிகள் அவனது நீர்ப்பாசன முறைகள் பற்றித் தெரிவிக்கும் பழமையான நீண்டபாடல் கல்வெட்டும், இருக்கன்குடி (இருப்பைக்குடி)க் கண்மாயில் இருந்த அவனது

மடைக்கல்வெட்டும் தற்போது முற்றிலும் அழிவுக்குள்ளாகி மறைந்து போயின.[3] இவை வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் (கி.பி. 815-862) கல்வெட்டுகளாகும். சாத்தூரில் நெடுமாறனால் தோற்று விக்கப்பட்டு இருப்பைக்குடிக்கிழவனால் பழுதுபார்க்கப்பட்டதைத் தெரி விக்கும் நீர்ப்பாசனக் கல்வெட்டும், நென்மேனியிலுள்ள ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் கல்வெட்டும் அங்குள்ள மடைகள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. திண்டுக்கல் மாவட்டம் இராமநாதபுரம் என்ற ஊரில் பள்ளிநாட்டு வேளான்களால் இரண்டாம் வரகுணன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஏரியில் இருந்த மடையும் அழிவுக் குள்ளாகி அதனருகில் இருந்த பாறையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மட்டும் தற்போது எஞ்சியுள்ளது.[4]

தற்காலத்து நாகரிகம் மற்றும் அறிவுவளர்ச்சியில் அழிவுக்குள்ளாகும் பண்டைய நீர்ப்பாசனக் குளங்களிலுள்ள மடைகளையும் அவற்றிலுள்ள கல்வெட்டுகளையும் காப்பது இன்றைய அவசரத்தேவையாகும். பழங்கால நீர்ப்பாசன முறைமையைத் தெரிவிக்கும் அரிய சான்றுகள் இவையாகும். பண்டைய குளங்களை நவீனப்படுத்தும்நோக்கில் விரிவுபடுத்தும்போது பழைய மடைகள் அழிவுக்கு ஆளாகின்றன. தற்போது புதியனவாக அமைக்கப்படும் நீர்ப்பாசன மடைகள் பல நூற்றாண்டுகள் இடைவெளியில் மேடிட்டுவிட்ட, தற்போது விரிவுபடுத்தப்படும் அக்குளங்களின் கரையின் மீதே அமைக்கப் படுகின்றன. அவ்வாறு அமைக்கும்போது மடையுடன் இணைந்த பழமையான நீர் செல்லும் தூம்புகளும் சிதைக்கப்படுகின்றன. புதிய கலிங்குகள், மடைகள் கட்டுவதற்கும் கோயில் போன்ற கட்டடங்கள் கட்டுவதற்கும் பழைய மடைக்கற்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே இது தொடர்பாக இவ்வழிவைத் தடுக்கும்நோக்கில் தமிழ்நாட்டிலுள்ள பழமையான நீர்ப்பாசனக் குளங்களின் பட்டியல் ஒன்று தயார்செய்து மாவட்ட நிர்வாகத்திற்கும் பொதுப் பணித்துறைக்கும் அனுப்பலாம். பழமையான குளங்களின் வரலாற்றுச் சிறப்போடு அவற்றிற்கு அழிவு செய்யக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் கூடிய அறிவிப்புப் பலகைகளை அவற்றின் கரையில் நட்டு வைக்கலாம். இதன் மூலம் நமது பண்டைய பொருளியல் வளர்ச்சியைத் தெரிவிக்கும் கல்வெட்டுகளுக்கு வரும் அழிவைத் தடுக்கலாம். நீர்ப்பாசனமுறை குறித்த பண்டைய நாகரிகம், பாரம்பரியம், பெருமை ஆகியவற்றிற்கு வரும் அழிவைத் தடுத்து நிறுத்தலாம்.

## நத்தம் கண்மாய்க் கல்வெட்டு

நத்தம் மதுரைக்கு வடக்கே முப்பத்தாறு கிலோமீட்டர் தொலைவி லுள்ளது. இவ்வூரின் தென்புறத்தில் தெற்கு வடக்கான கரையினைக் கொண்ட பழமையான கண்மாய் ஒன்று உள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் துவராபதிநாடு என்று அழைக்கப்பட்ட இப்பகுதியின் நாட்டுத் தலைவர்களாக விளங்கிய துவராபதிவேளான்களில் ஒருவன் இதனை உருவாக்கியுள்ளான். இக்கண்மாயின் தென்கோடியில் ஏணி வடிவில்

கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்மடையின் குறுக்குக் கல்லில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு இதனை உருவாக்கியவனின் பெயரைத் தெரிவிக்கிறது. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியை இது சார்ந்தது. இக்கல்வெட்டு தென்னவன் துவாரபதிவேளான் என்ற துவராபதி நாட்டின் தலைவன் நத்ததிலுள்ள பெருங்குளத்தையும் அதன் மடைகளையும் செய்வித்தான் என்று கூறுகிறது.[5]

துவராபதிநாடு என்பது இன்றைய நத்தம் வட்டத்தின் பெரும் பகுதியை அக்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது. இந்நாட்டின் தலைவர்களாக விளங்கிய துவராபதி வேளான்கள் குறித்த கல்வெட்டுகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு முடியப் பாண்டிய நாட்டில் கிடைக்கின்றன. துவராபதிநாட்டின் குடித் தலைவர்களாக விளங்கிய இவர்கள் காலப்போக்கில் தங்களது ஆளுமையைப் படிப்படியாக இழந்து பாண்டிய அரசின் அலுவலர்களாக மாறி வரலாற்று வெள்ளத்தில் மறைந்து போனார்கள். பாண்டிய நாட்டில் இதுபோன்ற நாட்டுத் தலைவர்களாக விளங்கியவர்களே முற்காலப் பாண்டியர் காலத்தில் உள்நாட்டு அமைப்பின் தலைவர்களாக இருந்தார்கள். அரசுக்கு வேண்டிய போது படையுதவி செய்து பாண்டிய அரசர்களுடன் வெளிநாட்டுப் படை யெடுப்பில் கலந்து கொண்டார்கள். பாண்டிய நாட்டின் புறப்பகுதிகளில் இருந்த இவர்கள் அவர்களுக்குரிய நாடுகளில் நீர்பாசனக் குளங்களைத் தோற்றுவித்து அவற்றிற்குப் பொறுப்பாகவும் இருந்துள்ளார்கள்.

## உறப்பனூர்க் கண்மாய்க் கல்வெட்டு

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்திலுள்ளது உறப்பனூர் கிராமம். திருமங்கலத்திலிருந்து செக்கானூரணி செல்லும் வழியில் இது அமைந்துள்ளது. இக்கிராமத்தினையொட்டி முற்காலப் பாண்டியர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட மிகப்பெரிய ஏரியொன்று உள்ளது. இது சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்தைத் தரும் பரப் புடையது. இதனையடுத்துள்ள ஒன்பது கண்மாய்களுக்கு இதன் மூலமாக நீர்செல்கிறது. இதன் உள்வாய்ப் பகுதியில் ஏணிபோன்ற வடிவில் கல்லால் கட்டப்பட்ட பல கல்மடைகள் உள்ளன. இவற்றில் நடுவில் அமைந்த கல்மடையில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியைச் சார்ந்த எழுத்தமைதியில் தமிழ், கிரந்தம் கலந்த எழுத்துகளில் இரு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.[6] செங்குத்தாக நிற்கும் நடுமடைத் தூண் ஒன்றில் 'ஸ்ரீ வீரநாராயணன்' என்றும் மற்றொரு தூணில் 'ஸ்ரீ கரிவரமல்லன்' என்றும் முற்காலப் பாண்டியர்க்குரிய பெயர்கள் காணப்படுகின்றன. கரிவரமல்லன் என்று பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு வாசகத்தின் மேற்புறம் இருசாமரங்களுக்கு நடுவே கொற்றக்குடையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்புறம் இரு குத்துவிளக்குகளின் நடுவே பூரண கும்பத்தின் உருவம் காணப்படுகிறது.

கல்வெட்டு குறிப்பிடும் 'வீரநாராயணன்' என்ற பெயர் தளவாய்புரம் செப்பேட்டை வெளியிட்ட பராந்தகவீரநாராயணனுக்குரிய (கி.பி. 866-911) பெயராகும். முற்காலப்பாண்டிய மன்னர்களில் இப்பெயரினைப் பெற்றவன் இவன் ஒருவனே ஆவான். இவனுக்கு, யானை போன்ற வல்லமை படைத்தவன் என்ற பொருளில் 'கரிவரமல்லன்' என்ற பெயர் இருந்திருப்பதை உறப்பனூர் மடைக்கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.

உறப்பனூர்க் கண்மாயின் கலிங்கில் அவ்வூரிலிருந்து அழிந்துபோன கோயிலுக்குரிய முதல் இராசராச சோழனின் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது.[7] இது அம்மன்னனுக்குரிய 'திருமகள் போல' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இதில் உறப்பனூர் கிராமம் 'நாட்டாற்றுப்புறத்து உறப்பனூர்' என்று குறிப்பிடப்படுகிறது. 'நாட்டாற்றுப்புறம்' என்பது வைகையாற்றிலிருந்து மதுரையைச் சார்ந்த மாடக்குளம் என்ற நீர்ப்பாசன ஏரிக்கு நீரைக்கொண்டு செல்லும் ஆற்றுக்கால் பகுதியினையொட்டி அமைந்த நிலப்பரப்பைக் குறிக்கும் உள்நாட்டு நிலப் பிரிவாகும். இந்நாட்டுப் பிரிவு முற்காலப் பாண்டியர் காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வந்துள்ளது. உறப்பனூரிலிருந்து செக்கானூரணியை அடைந்து அங்கிருந்து மதுரையை நோக்கிச் செல்லும் பெருவழியில் நாகமலைப் புதுக்கோட்டைக்கு அருகில் இப்பழமையான நீர்ப்பாசனக்கால் பெருவழியைக் கடந்து மாடக்குளம் நோக்கிச் செல்கிறது. இக்காலுக்கு மேற்கே மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள கொங்கர் புளியங் குளமும் 'நாட்டாற்றுப்புறம்' என்ற உள்நாட்டுப்பிரிவில் இருந்துள்ளது. இதனை இப்பகுதியிலுள்ள பராந்தக வீரநாராயணின் சமணமலைக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. (நாட்டாற்றுப்புறத்து புளிங்குன்றூர்). தென்பரங்குன்றத்திலுள்ள முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு இதனை "வீரநாராயணக் குளக்கீழ் புளிங்குன்றூரான சுந்தர பாண்டியபுரம்" என்று குறிப்பிடுகிறது.[8] இதனால் நாட்டாற்றுப்புறம் என்ற பழைய நாட்டுப்பிரிவின் பெயர்வழக்கு நீக்கப்பட்டு இப்பகுதி 'வீரநாராயணக் குளக்கீழ்' என்று பராந்தகவீரநாராயணனின் பெயரில் அமைந்த நாட்டுப் பிரிவாக மாற்றி அழைக்கப்படலாயிற்று எனத் தெரிகிறது.

குளக்கீழ் என்ற பின்னொட்டைப் பெற்ற நாட்டுப்பிரிவுகள் பாண்டிய நாட்டில் பல இடங்களில் இருந்துள்ளன. உறப்பனூர்க் கண்மாய்க் கல்வெட்டு மூலம் 'வீரநாராயணக்குளம்' என்பது உறப்பனூர்க் கண்மாய்க் குரிய பெயராக இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம். நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு அவ்வேரியைச் சார்ந்து வாழ்ந்த வேளாண்சமூகக் குடியிருப்புகள் 'வீரநாராயணக் குளக்கீழ்' என்ற நாட்டுப்பிரிவில் அடக்கப் பட்டிருக்க வேண்டும்.

திருநெல்வேலிப் பகுதியில் தாமிரபரணியாற்றினையொட்டி நாட்டார் செல்வாக்குள்ள ஊர்களில் பல அரசியல் பொருளாதார மாற்றங்களைச்

செய்து அவற்றிற்கு வளநாடுகள் என்று முற்காலப்பாண்டியர்கள் பெயரிட்டுள்ளனர்.[9] (எ.கா. : திருவழுதிவளநாடு, ஸ்ரீவல்லபவளநாடு, பராந்தக வளநாடு, அமிதகுணவளநாடு) ஆற்றுக்கால்கள் பாயும் நிலப்பரப்பில் இத்தகைய நடவடிக்கையை - அப்பகுதியில் இருந்த வேளாண்சமூக நாட்டார் நடவடிக்கையைக் - கட்டுப்படுத்தி அங்கிருந்த உள்நாடுகளிடையே அரசனது மேலாண்மையைச் செலுத்தும் முறையில் இம்மாற்றங்களைப் பாண்டியர்கள் செய்துள்ளனர். தாமிரபரணியின் இருகரைகளிலும் நாட்டார்க்குரியதாக இருந்த வளமான வேளாண்சமூக ஊர்களைப் பிரமதேயமாக மாற்றி அவற்றைத் தங்களது நேரடி நிர்வாகத்தின் கீழே கொண்டு வந்தனர். பிரமதேய ஊரமைப்பு மூலமாகப் புதிய நீர்ப்பாசன அமைப்புமுறையை உருவாக்கினர்.

இதுபோன்ற நடவடிக்கைகள் வைகையாற்றுக் கரைப்போக்கிலும் முற்காலப்பாண்டியர் காலத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் தாமிரபரணி போன்று நேரடியாக ஆற்றுக்கால் மூலமாக வேளாண்மை நடைபெறவில்லை. ஆனால் ஆற்றின் கரையையொட்டி இருமருங்கிலும் பெரிய நீர்ப்பாசனக்குளங்களைத் தோற்றுவித்து அவற்றின் மூலமாக வேளாண்மையைச் செய்தனர். இவற்றிற்குரிய நீர் வைகையாற்றிலிருந்து ஆற்றுக்கால் வெட்டப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டது. இப்பணியை அரசனும் அதிகாரிகளும் செய்துள்ளனர். (தொடக்கத்தில் இதனை நாட்டார்கள் செய்துள்ளனர்) திருப்புவனம் கண்மாய் இரண்டாம் இராசசிம்மனால் இராசசிங்ககுளம் என்ற பெயரில் பெரிய அளவில் உருவாக்கப்பட்டதைச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடு தெரிவிக்கிறது.[10] அதுமுதல் அவ்வேரியின் பாசனத்தின்கீழ் அமைந்த ஊர்கள் 'இராசசிங்கக் குளக்கீழ்' என்ற நாட்டுப்பிரிவில் இருந்த ஊர்களாகப் பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. குளக்கீழ் என்ற பெயரில் அமைந்த நாடுகள் பல வைகைக்கரையில் இருந்தன.[11] (எ.கா.: மாடக்குளக்கீழ், வேலூர்க் குளக்கீழ், மணலூர்க்குளக்கீழ், குன்றத்தூர்க் குளக்கீழ், அழகிய பாண்டியக் குளக்கீழ்) இக்குளக்கீழ் என்ற நாடுகளின் பெயர்களும் காலப்போக்கில் மன்னன் பெயரால் மாற்றப்பட்டன. பாண்டிய அரசின் ஆதிக்கத்தை வேளாண்சமூக நாடுகளிடையே ஏற்படுத்தும் வகையில் இம்மாற்றம் செய்யப்பட்டிருக்கவேண்டும். அம்முறையிலேயே உறப்பனூர்ப் பாசனவேரியும், வீரநாராயணக் குளக்கீழ் நாடாக மாறியிருக்க வேண்டும்.

முற்காலப் பாண்டிய மன்னர்கள் பண்டைய நீர்ப்பாசனக்குளங்களைப் புதுப்பித்தல், புதிய ஏரிகளைத் தோற்றுவித்தல் மூலமாகப் பண்டைய வேளாண்சமூக நாட்டு நிர்வாகத்தின் கீழிருந்த பாசனக்குளங்களைத் தங்கள் கட்டுக்குள் கொண்டு வந்தனர். அவற்றின்மீது தங்களுக்கிருந்த உரிமையைப் படிப்படியாக நிலைநாட்டினர். இதன் மூலம் அக்குளங்களின் பாசனத்தின் கீழிருந்த ஊர்களும் முற்காலப்பாண்டிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் வரத் தொடங்கின. முற்காலப்பாண்டியர் காலத்தில் இருந்த நாட்டார் மற்றும்

நாடுகிழவர் ஆதிக்கத்தில் இருந்த நாட்டு நிர்வாகப் பகுதிகளைப் படிப்படியே பல உத்திகளைக் கையாண்டு தங்களது நிர்வாகத்தின் கீழே பாண்டியர் கொண்டுவந்தனர் என்பதனை இது காட்டுகிறது.

திருப்பரங்குன்றத்திற்குத் தெற்கேயுள்ள நிலையூர் பாசனவேரியும். பராந்தகவீரநாராயணனின் பெயரினைப் பெற்றுள்ளதை அங்குள்ள அவன் கால மடைக்கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது.[12] அதனைத் தொடர்ந்து இக்குளத்தின் பாசனத்தின்கீழே அமைந்த ஊர்ப்பகுதிகள் 'வீரநாராயண வளநாடு' என்ல பெயரில் அமைந்த நாட்டுப்பிரிவில் வந்தன என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

மேற்கண்ட மடைக்கல்வெட்டுகளின் ஆய்வு முற்காலப்பாண்டிய, அரசு எவ்வாறு படிப்படியாக உள்நாட்டுப் பகுதியில் நீர்ப்பாசனத்தின் மூலம் வேளாண்மையை ஏற்படுத்தி அதனை மைய அரசின் கட்டுக்குள் கொண்டு வந்தது என்பதைக் காட்டுகிறது. மேலும் செங்கல் தளிகளைக் கற்றளியாக மாற்றியது போன்று முற்காலப்பாண்டியர் காலத்திலேயே தொன்றுதொட்டுச் செங்கல்லால் கட்டப்பட்ட நீர்ப்பாசனமடைகள் கருங்கல்லால் கட்டப் பட்டன. இதனால் மடைகள் எளிதில் அழிந்து போகாமல் நிலைத்த தன்மையுடன் அக்கால நீர்ப்பாசனமுறைக்குப் புதிய உத்வேகத்தையும் தந்தன என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். ●

அடிக்குறிப்புகள்

1. புறநானூறு பா. 33.
2. பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை (1967) பக். 154.
3. வெ. வேதாசலம், "இருப்பைக்குடிக்கிழவன்" தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, தென்னிந்திய வரலாற்றுப் பேரவை.
4. SII. Vol. XIV. No. 26.
5. இக்கல்வெட்டினைப் பேராசிரியர் எ. சுப்பராயலு, தொல்லியல்துறைக் கல்வெட்டாய்வாளர் சு. இராசகோபால் இணைந்து கண்டறிந்தனர்.
6. இக்கல்வெட்டினைப் பனையூர் கரு. இராஜேந்திரன் கண்டறிந்து தெரிவித்தார். அதன் பின்னர் இது தொடர்பாகக் களஆய்வு செய்யப் பட்டது.
7. இக்கல்வெட்டு தொடர்பாகத் தகவல் தந்தவர் திரு. செல்வக்குமார் ஆவார்.
8. SII. Vol. IV, No. 372.
9. SII. Vol. XIV. Nos. 16A.
10. பாண்டியர் செப்பேடு பத்து, பக். 157.
11. வெ. வேதாசலம், 'குளக்கீழ்' தொல்லியல் ஆய்வுத்தொகுதி, தொல் பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை, (1985) பக். 278 - 291.
12. ARE 223/1941.

இக்கட்டுரை சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையில் 2002-இல் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு படிக்கப்பெற்றது.

# Report on the Condition and Restoration of an Oil Painting brought from Ramalingavilasam Palace Museum, Ramanathapuram

3

**M. S. ASHOK DEEN**
Archaeological Chemist

Generally a painting is categorized into four layers. They are 1. Support or Carrier. 2. Ground. 3. Pigment or Paint. 4. Preservative Coating. Depending upon the support the paintings are classified as Rock Painting when it is painted on a Rock, Wall Painting when it is Painted on a wall, Glass Painting when it is on glass, Easel Painting when canvas or panel is used on easel. Hence a conservator should have depth of knowledge of the basic materials, such as the supports, grounds, binders, solvents, varnishes and preservatives, so that he can select the nearest materials matching the original, which should also be reversible. On this basis, I like to discuss an oil painting on canvas bearing the portrait of Sankaracharaya of Srungeri mutt, which was brought from Ramalingavilasam Palace Museum, Ramanthapuram for restoration. It was examined and restored.

**Location**

The oil painting on canvas was on display at Ramalingavilasam Palace Museum, Department of Archaeology, Ramanathapuram.

**Condition of the locality**

The Ramalingavilasam Palace is a tourist spot at Ramanathapuram. The water table is saline. Humidity

and temperature fluctuate. It is a dry place with lot of dust and dirt generated in the air by the movement of heavy vehicles.

**A portrait of Sankaracharaya of Srungeri Mutt —**

**History of the painting**

The Ramalingavilasam Palace was donated by Sethupathi kings of Ramanathapuram to the Tamilnadu Government. The portrait is one of the many objects gifted to the Department of Archaeology from the collections of the Sethupathi kings. It bears the artist's name as C. Ramenpillai.

**Description of the painting**

It is a canvas painting of size 115 cm. x 69 cm. holding an outer frame of size 10cm. x 10cm., with inner beading coated with gold colour. The whole backside was covered with galvanized sheet.

**Condition of the Painting**

The oil painting on canvas was brittle due to age and environment,, tears were found, dust and dirt had accumulated, streaks were noticed, the surface was dry without varnish, and the red saffron colour was found to be bleeding at some places. Earlier restoration has been found. The frame is made up of teak wood with inner beading coated with gold colour. The rear side of the painting has been stretched on the inner frame. The whole rear portion is covered with galvanized iron sheet which had totally rusted. The right side corner has been lost, two rings made up of iron had been fixed to the object frame at 40 cm from the top and it has started rusting, and the canvas painting was torn at five places :

1. To a length of 3 cm. at 22 cm. from the bottom on the left portion of the painting.
2. Restored earlier with a 12cm. × 10.5 cm. piece of paper pasted and matched to the original colour at 46 cm. from the top to the left side of the painting.

3. The same has been done with a help of 2.8 cm. × 2.9 cm. paper bit at 3 cm. from the top to the right side of the painting.
4. To length of 1 cm. at 34 cm. from the top to the right side of the painting, and
5. To a length of 4 cm. at 14 cm. from the top towards leftside of the painting.

**Methods of Restoration**

The oil painting on canvas was first dismantled from the frame. The accumulated dust, dirt and white accretion on the surface of the canvas were swabbed with clean cloth. Later the canvas was removed from the stretcher frame carefully. Since the canvas was very dry a mixture of linseed oil and turpentine in the ratio 1:1 was applied on the surface of the oil painting to provide flexibility to the canvas. All the torn and weak areas of the canvas were relined with seasoned canvas pasted at the back of the original canvas with the help of bee's wax and mastic resin in the ratio 4:1 mixed well by heating. Before relining a tissue paper was given a facing with maida flour paste, so that the painting doesn't get damaged when it is placed on the front side while relining. Excess wax and bubbles formed while relining were removed by a regulated heating spatula moved from center to the sides. Then after setting, the oil painting on canvas was placed on the stretcher frame with suitable keys, so that the canvas was tight and uniform. Since the facing of tissue paper with maida flour paste is reversible it was removed easily. The excess bee's wax on the surface of the painting was removed by swabbing with cotton dipped in benzene, and the difference in level between the relined canvas from the back to the original canvas was infilled with a putty prepared with zinc oxide, linseed oil and oil paint matching the original colour. This was allowed to dry. This process of infilling was carried out till the level of depth equalized with the original ground of the painting. This was followed by retouching with oil colour for

the lost portions and stained portions, and then allowed to dry. Again a mixture of turpentine oil and linseed oil in the ratio of 1:1 was applied and allowed to dry. Finally a coating of picture varnish was applied to act as a preservative and the restored oil painting was fixed to the outer frame.

The oil painting now is on display at Ramalingavilasam Palace Museum, Ramanathapuram for posterity. Only when a friendly environment like controlled temperature and humidity is possible the life of the object is extended. Otherwise a frequent periodical examination is a must to keep it intact.

### பூம்புகார்க் கடலில் அரிய பானை ஓடு

பூம்புகார்க் கரையிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் ‘கரையைப்பார் கோயில்’ என்ற இடத்தில் 23 மீட்டர் ஆழத்திலிருந்து மீனவர் **திரு. என். ஏழுமலை** ஒரு தொன்மையான பானை ஓட்டினையும், யானை முகச் சங்கு ஒன்றினையும் சேகரித்துத் தொல்லியல் துறைக்குத் தந்துள்ளார். பானை ஓடு 25 × 28 செ.மீ. அளவில் மங்கலான சந்தன நிறமுள்ளதாகும். இப்பானை ஓட்டில் அணி வேலைப்பாடுடன் கூடிய ஒரு பூதகணம் அல்லது தேவதையின் முகமும், அணி வேலைப்பாடுடன் கூடிய வேல் போன்ற மொட்டும், சூரியனின் கதிர்களும் சற்று இடைவெளி விட்டுத் தனித்தனியாகப் பரவலாகப் புடைப்பு வார்ப்புகளாக உள்ளன. இப்பானை ஓடு சீனத்திலிருந்து வந்த ஒரு சாடியின் பகுதியாகும். இதன் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு என்று கருதலாம். பூம்புகார் ஐரோப்பிய நாடுகளுடனான வணிகத் தொடர்பிற்கு ஈடாக ஆசிய நாடுகளுடனும் கொண்டிருந்த வணிகத் தொடர்பை இப்பானை ஓடு தெளிவுபடுத்துகிறது.

**கோ. முத்துச்சாமி**
கல்வெட்டாய்வாளர், பூம்புகார்

# 4 Korkai and Iron Smelting

**S. Ramachandran**
Epigraphist
Chennai

Korkai, the ancient port - city of the Pandyas, situated in Tiruvaikundam taluk of Tooththukkudi district is now a sleepy village. The name Korkai can be derived from the root word *Kol* or *Kolluttolil i.e.* craftsmanship or the profession of artisans. Korkai might have been the emporium of artisans, where ironsmiths, goldsmiths and carpenters, particularly ship-builders abounded. It is mentioned in *Cilappatikaram* (uraiperukatturai) that one thousand goldsmiths were slaughtered and sacrificed to the goddess *Nangai* at Korkai by Verriverceliyan. It was perhaps as a mark of atonement for the crime committed by the royal goldsmith and the subsequent tragedy which changed the fate of Kannaki the heroine of *Cilappatikaram.*

We are not sure whether such a large scale massacre was possible, but, it is interesting that Korkai was chosen for such an event. The abundance of artisans, particularly goldsmiths in Korkai in those days is implied in this version of the occurrence. There is one temple called *Akkasalai Vinayakar* temple at Korkai, the name itself suggesting its connection with *Akkasalai* or mint, which was usually under the control of goldsmiths, as it was the custom followed in those days. (The word *akkasali* is still used in Kannada to denote a goldsmith). The name of one *Vira Pandiya Acariyan* a *Kammala* (artisan) is mentioned in a 13th century inscription inscribed on the walls of this temple. Even now, this temple is under the management of goldsmiths.

The famous megalithic burial site of Adichchanallur is situated 20 kms. west of Korkai. Near Adichchanallur, there is Alwartirunagari, the birth place of the Vaisnavite saint

Nammalwar. The original name of this village was Kuruhur. The word *kuruhu* was used to denote the furnace of artisans in Cilappatikaram. *(utulaikkuruhu)* According to the artisans of this area, this village was previously their head quarters. It is mentioned in "*Mukkootarpallu*" a 17th Century literary work, that a big mansion surrounded by gardens, which served as the residence of a goldsmith, who was under the exclusive service of the Pandyas *(Valutikulappattanar malikaippunkadu)* was situated at Alwartirunagari.

There is a village called Alwarkarkulam near Tiruvaikundam, the taluk head - quarters. It is learnt from an inscription engraved on the northern wall of the *gopura* of the Alwartirunagari Perumal temple, that this village was considered as the western hamlet of Alwartirunagari and its name was *Karkalam.* (*melpitakai karkalam).* The term *karkalm* implied that stone quarrying was going on here in olden days[1]. There is one *parambu* (elevated mound) here, which contains, lateritic soil and quartzite, containing silica. This quartzite is called *cinikkal* in this area. This mound extends upto the Vallanadu hills, and in the year 1998, Mr. Billy Graham, Lieutenant Colonel (Retired) discovered some tuyeres and iron slag in these hill ranges. After this discovery was reported to the author of this article, he explored the mound at Alwarkarkulam and found iron slags scattered all over the entire area.

Of course our fore fathers were well aware that quartzite served as a catalyst while iron ore was smelted. It has already been mentioned that people call it as *cinikkal.* It is interesting to know that the word *cini* is used for explosives in *Kattabamman Kathaippatal.*[2] The Kadambur Zamindhar, who assisted the British East India company in the suppression of the Poligar rebellion, and who was gifted with one third of the villages that were previously under the control of Kattabomman, was conferred with the title "*Cini Vellalar*" euphemistically meaning one who produces *cinikkal or quartzite.* There are many *parambus* or

elevated mounds containing lateritic soil and quartzite, in that area. The British East India company probably procured quartzite from the Kadambur Zamindhar and used it for manufacturing explosive material, quartzite enhancing the heat and subsequently the impact of explosion.

At the outset, it was mentioned that Korkai might have been an emporium of artisans and craftsman. It has now become an established fact that Korkai and Adichchanallur were important centres in the megalithic period (Circa 8th century B.C. to 3rd century A.D.), when iron smelting was practised on a large scale. River sand containing iron ore called *olukkarai* or *olukku aral* was collected in heaps and iron extracted with great labour. This practice is in vogue even now in this area, though the quality of the product is inferior. A palm - leaf manuscript belonging to 1857 A.D. mentions that such iron objects were locally manufactured at Eral near Korkai, and exported through the port of Thooththukkudi.[3] Such references confirm the fact that iron smelting had been practiced here for the past 2800 years. It has already been established by the Department of Archaeology that people who were familiar with iron technology and who buried the dead in huge urns, lived here in the 8th Century B.C.[4]

---

1. ப. 163. தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி முதல் தொகுதி, பதிப்பு : சாந்திசாதனா, சென்னை-28, 2002.
2. பக். 83, 88 - கட்டபொம்மன் வரலாறு அல்லது சண்டைக்கும்மி, GOML பதிப்பு, 1960.
3. ''ஐவர் தூக்கு லட்சுமியினால் கதை'' – திருவைகுண்டம் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகக் காவலர் திரு. இராமசாமி வசம் உள்ள ஓலைச்சுவடி, புதிய கண்டுபிடிப்பு.
4. Damilica Vol. I, p. 42. Editor : R. Nagaswamy, Dept. of Archaeology, 1970.

# சித்திரமேழிப்பிள்ளை கல்வெட்டு கண்டுபிடிப்பு

## 5

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர்,
சிதம்பரம்

கடலூர் மாவட்டம் பெண்ணாகடம் அருகே உள்ள ஊர் ஆதமங்கலம். இவ்வூரில் புதுப்பிக்கப்பட்டு விட்ட அமிர்தகடேஸ்வரர் கோயில் எனப்படும் பழைய சிவாலயம் உள்ளது. இக்கோயிலின் முகமண்டபத் தூண்களில் பழங்காலச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இவ்வூரில் பொதுமக்கள் மாரியம்மன் கோயில் கட்டுவதற்காகக் கடைகால் தோண்டியபோது 9 அடி ஆழத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்றூண் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப் பட்டது.[1] கல்வெட்டுடன் கூடிய இத்தூணில் அமர்ந்த நிலையில் கையில் மலரேந்தி, தலையில் கரண்ட மகுடம் சூடி, செவிகளில் பத்ர குண்டலமணிந்து, மார்பில் கச்சின்றி இரு பெண் தெய்வங்களின் உருவங்கள் கொற்றக்குடையுடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. முக்காலி, கலப்பை, விளக்குகள் போன்ற சின்னங்களும் அத்தெய்வங்களின் அருகே காட்டப்பட்டிருக்கின்றன.[2]

**அத்தூண் கல்வெட்டில் காணப்படும் வாசகம்[3] :**

1. ஆதமங
2. கலத்து இ
3. ருக்கும் சித்
4. திரமேழி பி
5. ள்ளைக்கு நா
6. ட்டு செட்டி
7. கள் . . . ச பல்ல[ர்]
8. கள் சமைய மந்
9. [தி]ரிகள் [வி]ருதுக்
10. குகள் முனை வீ
11. ர கொடியாரும் எ
12. ழுபத்து ஒன்ப
13. து ந[ா]டும் நகர
14. மும் நிறைவ
15. ற நிறைஞ்சு
16. குறைவற
17. கூடி சித்

18. திரம் மே
19. ழி பிள்ளை
20. க்கு ந[ா]ம் எழு
21. தி ஆனது கு
22. டுத்தோம்[4]

---

1. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆய்வு மாணவர் திரு. லெனின் இக்கல்வெட்டு பற்றிய தகவலைத் தெரிவித்தார். ஆய்வின்போது பேரூராட்சித் தலைவர் திரு. பரமசிவன் அவர்கள் உடனிருந்து உதவினார். அவர்கள் இருவருக்கும் நன்றி.
2. சித்திரமேழிப் பெரிய நாட்டாரின் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்படும் ஐம்பொழில் பரமேஸ்வரியும் பூமிதேவியும் எனக் கொள்ளலாம்.
3. இக்கல்வெட்டினைத் திருத்தமுறப் படிக்க உதவியவர் முனைவர் சு. இராசகோபால், கல்வெட்டாய்வாளர் அவர்கள் ஆவார்.
4. இக்கல்வெட்டின் எழுத்தமைதி சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகத் தெரிகிறது.

## வாலிப்பாறை முதுமக்கள் தாழிகள்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மேகமலை உட்கடைக் கிராமமாக வாலிப்பாறை என்ற சிற்றூர் உள்ளது. மேகமலை அடிவாரத்தில் வைகையாற்றங்கரையில் அமைந்த இவ்வூர்த் தொடக்கப்பள்ளியில் விளையாட்டுத் திடல் அமைக்க முனைந்தபோது பல முதுமக்கள் தாழிகள் உள்ள ஒரு ஈமக்காடு அறியப்பட்டுள்ளது. 87 செ.மீ. உயரமும் 39 செ.மீ. சுற்றளவுள்ள வாய்ப்பகுதி மற்றும் 222 செ.மீ. சுற்றளவுள்ள வயிற்றுப்பகுதியுடன் ஒரு முதுமக்கள்தாழி மண்ணிலிருந்து எடுக்கப்பட்டு அத்தொடக்கப் பள்ளியில் வைக்கப்பட்டுள்ளது. இதனுள் இருந்த கருப்பு-சிவப்பு நிறக் கிண்ணங்களையும் எடுத்து வைத்துள்ளனர். பாண்டி நாட்டுப் பகுதியில் பல இடங்களில் இதுபோன்ற முதுமக்கள் தாழிகள் கிடைக்கின்றன. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை அரசு அருங்காட்சியகம் ஆகியவற்றில் இதுபோன்ற தாழிகளின் சேகரிப்புகள் காட்சியில் உள்ளன. அவை சுமார் 1800 ஆண்டு முற்பட்டவை. இத்தகவல்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சொல்லப்பட்டு மேலும் புதைந்துள்ள தாழிகளைச் சிதைத்துவிடாமல் பாதுகாக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வாலிப்பாறை கிராம அலுவலர் திரு. குணசேகரன் இக்கள ஆய்வுக்கு உதவினார்.

**வெ. வேதாசலம்**
கல்வெட்டாய்வாளர், மதுரை

# 6 தலைச்சங்காடு கல்வெட்டுகள்

**கோ. முத்துசாமி**
கல்வெட்டாய்வாளர்
மயிலாடுதுறை

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரிலிருந்து தரங்கம்பாடி செல்லும் சாலையில் தெற்கில் 12 கி.மீ. தொலைவில் தலைச்சங்காடு அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் படும் மாடல மறையோன் இவ்வூரில் வாழ்ந்தார் என்பர். இவ்வூரின் தெற்கில் சாலையையொட்டி அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளியின் விளையாட்டுத் திடலைப் பள்ளி நிர்வாகத்தினர் சமன்படுத்திய போது பூமிக்கடியில் கல்வெட்டுகள் புதையுண் டிருப்பது தெரியவந்ததாகத் திரு. மணி என்னும் ஆசிரியர் தகவல் தந்ததன் பேரில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட கற்பலகை ஆய்வு செய்யப்பட்டது. இக்கற்பலகையில் சோழ அரசன் முதற்பராந்தகன் காலத்ததாக (கி,பி. 907 - 953)க் கருதத்தக்க கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில், கி.பி. 1845ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு, சத்திரம் ஒன்றினைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**முதற் கல்வெட்டு:**
1) ஸ்வஸ்தி ஸ்ரீமு . . .
2) ங்கூற்று நாட்டு இ . . .
3) லூர் பேர் சிற்றம்ப . . .
4) திலார் கோலும் க . . .
5) லூர் நாழியும் ஞா . . .
6) பூம் நாட்டு வில்லா . . .
7) ரக்ஷை

**இரண்டாம் கல்வெட்டு:**
1) சூ ளா சு· ம ள
2) ச சூ கூ ளா ச ம சு
3) விசுவாவசு ஷூ
4) காற்த்திகை மீ௳ உல்
5) தயங்கம்பாடி
6) வீரப்ப செட்டியா
7) றால் செயிவித்த
8) - சத்திற தற்மம்

★

## 7 விக்டோரியா ஜூபிலி ரோடு

இர. ஜெயராமன் எம்.ஏ., பி.எட்.
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்
தஞ்சாவூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் கங்கை கொண்ட சோழபுரம் உள்ளது. முதல் இராஜேந்திர சோழனால் கட்டப் பட்ட கங்கை கொண்ட சோழீச்சுரம் கோயிலின் திருச்சுற்று மதில் ஆங்கிலேயர்களால் பிரித்தெடுக்கப்பட்டு அதன் கற்கள் கொள்ளிட ஆற்றில் பாலம் கட்டப் பயன்படுத்தப்பட்டன. மேலும், இராஜேந்திர சோழனால் வெட்டுவிக்கப்பட்ட சோழ கங்கம் எனும் பெரிய ஏரியின் நடுவே ஆங்கிலேயர்கள் சாலை அமைத்தனர்.

இந்நெடுஞ்சாலை. பிரிட்டிஷ் அரசி விக்டோரியா ஆட்சியின் ஐம்பதாவது ஆண்டைக் குறிக்கும் வகையில் "விக்டோரியா ஜூபிலி ரோட்" என்ற பெயரில் கி.பி. 1887-ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது என்பதைக் குறிப்பிடும் கல்வெட்டு அண்மையில் கண்டறியப்பட்டது.

ஜெயங்கொண்டத்தில், சிதம்பரம் - திருச்சிராப்பள்ளி சாலையும், தா. பழூர் - விருத்தாசலம் சாலையும் சந்திக்குமிடத்தி லிருந்து மேற்கே 50 மீட்டர் தொலைவில் இக்கல்வெட்டு உள்ளது.

**கல்வெட்டு வாசகம்**

VICTORIA
JUBILEE
ROAD
1887
விக்டோரியா ஜூபிலி
ரோட்
க அ அ எ

ஆண்டைக் குறிக்கும் தமிழ் எண்கள், தமிழ் மரபுப்படி அமையாமல் (சூ அா அ௭ எ என எழுதப்படாமல்) ஆங்கில மரபிலேயே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ★

# 8 நென்மேலிக் கல்வெட்டுகள்

**முனைவர் ஆ. பத்மாவதி**
கல்வெட்டாய்வாளர்
சென்னை

செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் செங்கல்பட்டிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஊர் நென்மேலி. இவ்வூரிலுள்ள அபிமுக்தீஸ்வரர் கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.[1]

**முதல் கல்வெட்டு :** பாண்டிய மன்னன் மூன்றாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் காலத்தைச் சேர்ந்தது. கல்வெட்டின் காலம் கி.பி. 1289 ஆகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்ற வானியல் குறிப்புகளைக் கொண்டு குடந்தை அறிஞர் என். சேதுராமன் அவர்கள் கணக்கிட்டு இப்பாண்டியன் மூன்றாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் என்றும் இவன் கி.பி. 1281 முதல் 1289 வரை ஆட்சி செய்தவன் என்றும் கூறுகிறார். இப்பாண்டியனைப் பற்றி அறிந்துகொள்வதற்கு இக்கல்வெட்டு தவிர வேறு எந்த தடயங்களும் கிடைக்கவில்லை என்கிறார்.[2]

**இரண்டாவது கல்வெட்டு :** சோழமன்னன் விக்ரமசோழன் காலத்தைச் சேர்ந்தது. இம்மன்னன் கி.பி. 1118 - 1135 வரை ஆட்சிபுரிந்தான். இவ்வூர்க் கல்வெட்டு அவனது எட்டாவது ஆட்சி யாண்டை அதாவது கி.பி. 1126-ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

### கல்வெட்டு எண் : 1

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருவாய்க் கேழ்விக்கு முன்னாக கோமாற பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம பாண்டிய தேவற்கு யாண்டு ஆுவது கும்ப நாயற்று பூறுவ பக்ஷத்து பிறதிமையும் திங்கட்கிழமையும் பெற்ற சதையத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்து களத்தூர் தமிழதரையர்களோம் இக்கோட்டத்து வல்ல நாட்டு எங்கள் காணியான நெல்மலியான புண்டரிக நல்லூர் உடையார் அபிமுத்தீசுரமுடைய நாயனார் கோயிலுக்கு இக்கோயில் கா

2. ணி உடைய சிவஸ்ராஹ்மண காஸ்யவர் காக்கு நாயக பட்டனான ஆண்டார் ஆவுடைத்தேவர் எழுந்தருளுவித்த புண்டரிக நாயகற்கு திருப்படி மாற்றுக்கும் பல பணி நிமந்தங்களுக்கும் நாங்கள் திருநாமத்துக்காணித் தேவதானமாக இந்நென்மலியில் விட்ட நிலமாவது கீழ்பாற்கெல்லை இந்நாயனார் பழந்தேவதானமான சேரமானுக்கு மேற்கு தெற்கு நோக்கிப் போன காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சத்துரு காலன் கிணற்றுக்கு வடக்கு மேற்கு நோக்கிப் போன வதிக்கு வ

3. டக்கும் மேல்பாற்கெல்லை வெள்ளக் காலுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை இந்நாயனார் பழந்தேவ தானத்திலே உறவும் ஆக இந்நாற் பாற் கெல்லைக்கு நடுவுட்பட்ட நிலம் பலதடியினால் குழி இரண்டாயிரத்து தொளாயிரத்து இருபத்து இரண்டு இதில் நில வேற்ற தாழ்வும் இதில் மேனோக்கின மரமும் கீழ் னோக்கின கிணறும் உப்ப இந்நாயனார்க்கு திருநாமத்துக்காணி இறையிலி தேவ தானமாக சன்திராதித்தவரை செல்வதாக ஸிலாலேகை பண்ணிக் குடுத்தோம் தமிழதரையர்களோம் இத்தர்மம் ரக்ஷித்தான் ஸ்ரீ பாதங்கள் தலைமேலின இத்தர்மபன்மாஹேஸ்வர ரக்ஷை:-

## கல்வெட்டு எண் : 2

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க ஜய மாது விரும்பத் தன்னிரு பதமலர் முன்னவர் சூட மன்னிய வுரிமையில் மணிமுடி சூடிச் செங்கோல் சென்று திசை தொறும் நடப்ப வெங்கலி நீக்கி மெய்யறந் தழைப்ப கலிங்க மிரியக் கடமலை நடாத்தி வலங்கொளாழி வரை யாழிதிரிய இரு சுடரளவும் ஒரு குடை நிழற்ற வீர ஸிம்ஹாஸநத்து முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரி பன்மரான

2. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீ விக்ரம சோழ தேவற்கு யாண்டு எட்டாவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டுக் கீழ்கோடு நென்மலியான புண்டரிக நல்லூர் அபிமுத்தீஸ்வரமுடையார்க்குக் களத்தூர் தமிழதரையன் உத்தமன் திரிச்சிற்றம்பலமு [டையா]

3. நேன் என் காணியான புண்டரிக நல்லூரில் பல நிமஞங்களுக்கும் மடைவிளாகத்துக்கும் விட்ட நிலமாவ்து மடை விளாகத்துக்கு வடபாற்கெல்லை இவ்வூர்ப் பெரியேரி கரைக்குத் தெற்கும் கீழ் பாற் கெல்லை வெள்ள வாக்காலுக்கு மேற்கும்

தென்பாற்கெல்லை அடவியேரி தென்கரையுறவும் மேல் பாற் கெல்லை இவ்வேரி கீ . . .

4. யே வடக்கு நோக்கிப் பெரியேரி கரையே யுறவும் இனித் திருப்படி மாற்றுக்கும் பல நிமஞங்களுக்கும் விட்ட நிலமாவன சேரமான் செறுவில் வடவரம்புக்குத் தெற்கு உள்ளிட்டன தடி பலவினாற் குழி [ஆ]யிரத்தறுநூறும் சேரமான் செறுவுக்கு தெற்கில் குடியிருப்பும் இவ்வூர் பெரியேரி யெதிர்வாய் அவிமுத்தீஸ்வர விளாகம் கீழ் பாற்கெ

5. ல்லை திருவிடைசத்ரு மேல் போன வழியில் நட்ட சூலக் கல்லுக்கு மேற்க்கும் தென் பாற் கெல்லை ஏரி நீர் கோவைக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை வல்லத்தில் கீழாசறுதியில் நட்ட சூலக்கல்லுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை சூலக்கல்லுக்குத் தெற்கும் இந்நாற்பாற் கெல்லை

6. (கெல்லை)க்கு உட்பட்ட நிலம் காடுவெட்டிக் கட்டைப் பறித்துத் திருத்தி இறையிலி தேவதானமாக பல நிமஞங் களுக்கு விட்டேன் தமிழதரயன் உத்தமன் திருச் சிற்றம்பல முடையாநேந் இத்தேவர்க்கு நான் விட்ட கமுகதோட்ட மாவது எந்நுடைய கமுகதோட்டத்தில் வடகிழக்கில் எறு செ

7. . . . . . . . . . . . . . . . . .

8. . . . . ம்பது குழியும் திட்டைச்செறுக்குழி நூற்று நாற்பதும் இதன் வடக்கில் திட்டைச் செறுக்குழி நூற்றறுபதுமாக தடிபலவினால் குழி

9. . . . த் தேழரையும் இதேவற்கு நான் வைத்த திருநஞா விளக்கு இரண்டுக்கும் சந்த்ராதித்தவரை செல்வதாக ஶிலாலேகை பண்ணிக் குடுத்தே[ன்]

10. தமிழதரையன் உத்தமன் திருச்சிற்றம்பலமுடையா நேன் இத்தர்மம் ரக்ஷித்தான் ஸ்ரீ பாதங்கள் என தலைமேலின இத்தர்மம் பந்மா மே

11. ஹஸ்வர ரக்ஷை :-

அடிக்குறிப்புகள்

1. இக்கல்வெட்டுகள் மத்திய தொல்லியல் துறையினரால் 1933-ஆம் ஆண்டு படியெடுக்கப்பட்டுச் சுருக்கம் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. கல்வெட்டு களின் வாசகம் இன்னும் வெளியிடப்படவில்லை. நென்மேலி ஊரைச் சேர்ந்த அறங்காவலர் கேட்டுக் கொண்டதன்படி 20 2-1999 அன்று படியெடுக்கப்பட்டுப் படிக்கப்பட்டது.

2. ந. சேதுராமன், பாண்டியர் வரலாறு பக்கம் 153.

## ஏத்த நிலை சீர்தழம்

சிதம்பரம் நகர எடத்தெருவில் ஒரு தேனீர்க்கடை அருகில் சாக்கடையை மூடப்பயன்பட்ட கல்லில் கல்வெட்டுள்ளதைச் சிதம்பரம் தொல்லியல்துறை அலுவலகத் தட்டச்சர் அறிந்து, அது அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஒரு கோயிற் சுவரிலிருந்து பிரிந்த கல் என்பதால் கல்வெட்டின் வாசகம் இருபுறமும் தொடர்ச்சியில்லாதுள்ளது. கல்வெட்டு வாசகம் பின்வருமாறு :

1. . . . . . த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தே . . .
2. . . . . கிழான் அரயன் திருச்சிற்றம்பல முடையா . . . .
3. . . . . . ண்டேச்வர தேவர்க்கு நான் இவற்றை . . . .
4. . . . . . து என் காணியான கமுகந் தோட்ட . . . .
5. . . . . . வடபார்கெல்லை ஊற்க் குளத்துக்கு தெ . . .
6. . . . . தமும் ஏத்த நிலை சீர் தழ முன்னூன்றி பின் . . . .

காடவமன்னன் கோப்பெருஞ்சிங்க தேவன் (கி.பி. 1231-43) காலத்தில் சிவன்கோயில் சண்டேச்வரர்க்கு அரயன் திருச்சிற்றம்பல முடையான் என்பவன் தனது பாக்குத் தோட்டத்தைக் கொடுத்த செய்தியை இக்கல்வெட்டு சொல்கிறது. தோட்டத்தின் எல்லை களைச் சொல்லும் போது ஊர்க்குளம் சொல்லப்படுகிறது. அடுத்துள்ள சொற்றொடர் 'ஏத்தநிலை சீர்தழ முன்னூன்றி பின்' என்பதாகும். இது அங்கு அமைய வேண்டிய நீர் இறைக்கும் ஏற்றத்தின் அமைப்பினைச் சொல்வது போலத் தோன்றுகிறது. தழல் என்பதற்குக் கவண், கிளி கடிகோல் என்ற பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி தருகிறது. ஏற்றத்தின் நிலைத்தூண் மேல் பகுதியில் இரண்டாகப் பிரிந்திருப்பதையும் அதன் இடையில் நீர் இறைக்கும் மரம் சீரான தராசு போல் இணைக்கப்பட்டி ருப்பதையும் இங்கு கருத்தில் கொள்ளலாம்.

**ச. கிருஷ்ணமூர்த்தி**
தொல்லியல் அலுவலர், சிதம்பரம்

# 9 ஆந்தகுடி சோமேசுவர சுவாமி கோயில் கல்வெட்டுகள்

**இர. ஜெயராமன்**
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்

ஆந்தகுடி என்னும் இவ்வூர் நாகப்பட்டினம் மாவட்டம் திருவாரூருக்குத் தென்கிழக்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரின் அருகே பாண்டவ ஆறு ஓடுகிறது.

இவ்வூரில் பெருமாள் கோயில், சிவன் கோயில் மற்றும் கிராம தேவதை கோயில்கள் உள்ளன. இவற்றுள் சோம கமலாம்பாள் உடனாகிய சோமேசுவரசுவாமி என்னும் சிவன்கோயில் மிகவும் தொன்மையானது. இக்கோயில் கல்வெட்டு எழுத்துக்கள் மற்றும் சிற்பங்களை நோக்கும் போது இக்கோயில் கி.பி 10-ஆம் நூற்றாண்டில் இராசராசசோழனால் கட்டப்பட்டு பின்பு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இங்குள்ள இராசராசன் காலத்திய துண்டுக் கல்வெட்டு ஒன்றும், அவனால் பிரதிட்டை செய்யப்பட்ட சேத்திரபாலர் சிற்பமும் அதனை உறுதி செய்கின்றன. சேத்திரபாலரின் பழைய சிற்பம் பின்னமாகி விட்டதால் அங்கு புதிய சிற்பம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கோயிலின் விமானம், மண்டபத்தின் கூரைப் பகுதிகளில் மரம் செடிகள் முளைத்து வளர்ந்து மிகவும் சிதிலம் அடைந்துள்ளதால் அவற்றைத் தூய்மை செய்து புதிதாகத் திருப்பணி செய்து வருகின்றனர்.

கருவறையின் உள்ளே மூலவர் லிங்க வடிவில் சிறிதாக உள்ளார். அதன் எதிரே முன் மண்டபத்தில் ஒரு சிறிய நந்தியும் பிரகாரத்தில் ஒரு நந்தியும் உள்ளன. முன் மண்டபத்தின் உள்ளே துர்க்கையம்மன் வழிபாட்டில் இருப்பது சிறப்புடையதாகும். கருவறையைச் சுற்றியுள்ள ஐந்து தேவகோட்டங்களில் சிற்பம் எதுவும் தற்போது இல்லை. கோட்டச் சிற்பங்களில் ஒன்று தான் இந்தத் துர்க்கை அம்மன் ஆகும். கோயில் இடிந்துவிட்டதால் அங்கிருந்த சிற்பங்கள் பெயர்த்தெடுக்கப்பட்டுக் கோயிலின் முன் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. முன் மண்டபத்தின் வாயிலில் சண்டிகேசுவரர், விநாயகர் சிற்பமும், பைரவர், சந்திரன் சிற்பங்கள் திருச்சுற்றிலும் உள்ளன. இவற்றுள் சேத்திரபாலர் சிற்பம் மிகவும் கலைநயத்துடன் வடிக்கப்பட்டுள்ளது. சோயிலின் வட திசையில் விநாயகருக்கும். நான்முகனுக்கும் சிறுகோயிலும் அம்மன் கோயிலும் உள்ளன.

இக்கோயிலின் கருவறையின் வெளியே ஜகதி, குமுதப் படைகளில் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை எந்த அரசனால் வெட்டப்பட்டன என்பது

தெரியவில்லை. ஒரு துண்டுக் கல்வெட்டு ''ஸ்வஸ்திஸ்ரீ உடையார் . . . . . . திருநாமத்துக்'' என்று காணப்படுகிறது. எழுத்து அமைதியை நோக்கும் போது இது முதலாம் இராசராசன் காலத்தது என்பது உறுதி. மேலும் ''ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்'' என்று தொடங்கும் இரு கல்வெட்டுக்களில் இவ்வூர் அருமொழி தேவ வளநாட்டுப் புலியூர் நாட்டில் இருந்ததாகவும், இவ்வூரின் பழைய பெயர் ஆந்தைக்குடியான நிகரிலி சோழ சதுர்வேதி மங்கலம்'' என்று வழங்கப்பட்டதாகவும், இறைவனின் பெயர் சோமனாத தேவர் என்று வழங்கப்பட்டதாகவும் கூறப் படுகிறது. மேலும் இக்கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக நிலம் விட்ட செய்தியும், திருவாரூர்க்கோயிலில் உண்ணும் தபசிகளுக்கும், இறைவனுக்கும் இறையிலியாக நிலம் கொடுத்த செய்தியும் கூறப்பட்டுள்ளன.

இக்கோயிலின் அருகிலுள்ள குளத்தை மக்கள் இன்றும் ''சோமனாதன் குளம்' என்றே அழைக்கின்றனர். சோமனாத தேவர் என்ற பெயர் இன்று சோமேசுவரர் என்று ஆகிவிட்டது. சோமன் அதாவது சந்திரன் இத் திருக்குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டுத் தன் பாவத்தைப் போக்கிக் கொண்டதாக ஊரார் கூறுகின்றனர். இதற்குச் சான்றாக இரு கைகளிலும் அல்லி மலர் ஏந்தி நின்ற நிலையில் ஒளிவட்டத்துடன் ஒரு சிற்பம் இக் கோயிலில் காணப்படுகிறது

க.எண்: 1. **கருவறை வடக்கு அதிட்டானம் ஜகதி**

1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் அருமொழி தேவ வளநாட்டு புலியூர் நாட்டு
2) ஆந்தைகுடியான நிகரிலிசோழச் சதுர்வேதி மங்கலத்து சோமனாத தேவர் கோயில் தேவகன்மிகளும் ஸ்ரீ மாஹேஸ்வர .
3) கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்வானுக்கும் இவ்வூர் தேவதான திருநாமத்துக் காணியாய் உடையார் திருவா
4) ரூர் ஸ்ரீ மூலஸ்தான முடையார்க்கு தேவதான இறையிலி யாக இட்டு தியாக வினோதன் கோயிலுண்ணுந் தபஷி களுக்கு வேண்டுவனவைவிற்றுக்கு.
5) (க் கு)டலாக இறுத்து வருகிற ப்ராமணப் பற்று ரூ-௩ஞ.௨ க்கு தரப்படி தேவர் . . . . . வெள்ளான் பற்றில் ரூ- வடக்கே
6) . காலுக்கு தரப்படி ௨ரும்கவ க்கு இவ்வூரில் ஒட்டுத் தாழ்வில் பத்துக்கு இரண்டால் முதல் கொண்ட நெல்லில்
7) இனி நில ஒ பாதி நிலம் உம்ள . . . . . . . . தேவதான இறையிலியாய் இறுக்கவும் இந்நிலத்தால் நெல்லு

க. எண்: 2 (முந்தைய கல்வெட்டின் தொடர்ச்சியாக இருக்கலாம்.)

1) க்கு தலைமாறு இவ்வூரில் ஒப்பில தாழ் . . . . . . . .
முதல் கொண்ட நெல்லில் சேதியராயந்
இலக்கைக்கும் கொற்றுக்கு . . . . இவன் பற்றின நெல்லு
நூற்று ப

2) த்து முக்கலனே முக்குறுணி நானாழியும் பெருந்தனத்து
வெட்டிக்கு இலக்கைக்கும் கொற்றுக்கும் . . . . .
விலை கொள்ளவும் கச்சிராயன் பற்றாள் நெல்லு நூற்றறு
பத்துக் கலனே முக்குறுணி நானாழியும்

3) ஊருட நெ கூட்டி உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையாருக்கு
தேவதான இறையிலியாய் தியாக வினோதன் சாலையில்
உண்ணும் தபஸிகளுக்கு வேண்டுவனவையிற்றுக்கு
இறுக்கவும் நெல்லுக்கு . . . தலைமாறு

4) சோமனாத தேவர்க்கு பூசலாங்குடியான கலிகடிந்த
சோழச் சதுர்வேதி மங்கலத்து தேவதான இறையிலி
நிலத்திலே . . . இரண்டொட்டு மா முக்குறுணி . . மாறி
இந்நிலத்திலே சேதியறாயனுக்கு ஒன்றே னாலு மாக்கா

5) ணி யரைக்காணி நிலமும் பற்றாய் நிற்கக் கடவதாகப்
பெற வேணுமென்று காங்கேயராயன் நமக்கு சொன்ன
மையில் இப்படி செய்யக் கடவதாக சொ

6) ல்லி கணக்கிலுட்பட இடக்கடவர்களாக வரி . . . . செய்
வார்களுக்கும் . . . . . . இத்தேவர்க்கு இவ்வூரில் திரு
னாமத்துக் காணியான நிலமும் இந்நிலத்துக்கு ஒட்டுத்
தாழ்வால் முதல் . . நெல்லும் எ . வதின் எதிராமாண்டு
மு

7) தல் தேவதான இறையிலியாக கைக்கொண்டு . . . . .
முதனாள் கோன் எழுத்து . இவை கங்கராய
னெழுத்து . இவை சேதிறாயன் எழுத்து.

க. எண் : 3 கருவறை தெற்கு அதிட்டானம் - ஜகதி
நடுவில் ஒரு கல் சிதைந்து விட்டது)

1) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை
கொண்டான் அருமொழி தேவ வளநாட்டு புலியூர் நாட்டு
. . . , . . . . . . . . தேவர் கன்மிகளும் ஸ்ரீ மாஹேஸ்வர

2) ர் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்
வானுக்கு . . தேவற்கு திருமடவிளாக . . . . . உத்தராய
. . . . . . பிரமணப் பற்றிலும் வெள்ளான் பற்றிலும்
இத்தேவர்

8) திருநாமத்துக் காணியான . . . . நிலத்துக்சு ஊர்க் கணக்கு உத்தமப் பிரிய எனமுத்திட்ட கணக்குப்படி தரப் பெற்ற நிலம் . . லயும் . . . . . . அளக்கக் குறைந்த நிலத்து ஒபாதி ரூ அரைமாவரை

4) க்காணி ரி அரையே காணி வரைக்காணி முந்திரிகையும் நிலம் ஒன்றே அரைமா வரைக்காணி ரூ அரையே காணி யரைக்காணி முந்திரிகையும் . . அளந்தபடி . . . . . வருகின்ற கட்டுக் குடலாயிருக்கிறபடியும் (களைந்து)

5) ௩௰௧ வது பசான முதல் நீங்கலாக நீக்கி வ . . செய்வார் களும் எழுத்திட்ட உள்வரி தரச் சொன்னோம் இன்னிலம் ௩௰௧வது பசான முதல் . . . . . . . . . . . . . . . மூவேந்த வேளானெழுத்து. இவை வில்லவரா

6) யனெழுத்து இவை விலாடராயனெழுத்து இவை விழிஞத் தரையனெழுத்து இவை வாணாயராய னெழுத்து . . . . . இவை அதிங்களராய னெழுத்து. இவை கனக ராயனெழுத்து இவை . . . . . னெழுத்து

**க. எண் : 4 கருவறை தெற்கு அதிட்டானம் ஜகதி**

1) ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ௩௰௧ வது நான் ஊஎ ன் நீங்கலாக நீக்கின படிக்கு . . . . . அருமொழி தேவ வளநாட்டு புலியூர் நாட்டு நிகரிலி சோழ சதுர்வேதி மங்கலத்து உடையார் சோமனாத தேவர்க்கு திருமடவிளாக முத்த

2) பிராமணப் பற்றிலும் வெள்ளான் பற்றிலும் இத்தேவர் திருநாமத்துக் காணியான நிலத்து செய்து நிலத்துக்கு ஊர்க்கணக்கு உத்தமப் பிரியனெழுத்திட்ட கணக்குப்படி நிலமாய் மூன்று . . .

3) யார் சுங்கந் தவிர்த்தருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு ௰சு வது அளக்கக் குறைந்த நிலத்தொபாதி ரூ . . . . . . . ஆக சு ஒன்றே அரைக்கா லரைக்காணி ரூ முரையே காணி வ

4) நிலவொபாதி . . . . . நிச்சயித்தபொதி ௨ . . . . . ௰சு வது அளந்தபடி நீங்கல் நீக்கின ரு௰ வேலி ௰எ வது நிச்சயித்த நிலத்தொபாதி . . . . . நிச்சயித்த

5) பெரியதேவர் க . . ால சோழ தேவற்கு சு வது சுருக்கி இறை கட்டின நிலத்தொபா . . . . . . . இத்தேவற்கு சு வது சுருக்கி இறை கட்டின நிலத்தொபாதி . . . . . . . . . .

6) நிச்சயித்த நிலத்தொபாதி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . உடையாருக்கு தேவற்கு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ஐம்பத்து தாற்கலனே ஐநாழி யுரியும்

**க எண் : 5 முன் மண்டபம் வட சுவர் (துண்டுக் கல்வெட்டு)**

1) ஸ்வஸ்தி ஸ்ரீ தேவர்க்குத் திருப்பனையூ . . . . .
2) றையிலியான நிலம் மூன்று . . . . .
3) ல்லு நூற்று எண்கலனே ஐ . . . . . .
4) பத்து ஐங்கலம் மறுவூரின் . . . . . .
5) குறுணி இருபூவால் நெல்லு . . . . . .

**க. எண் : 6 முன்மண்டபம் வடக்கு ஜகதி**

(இரண்டு துண்டுக் கல்வெட்டில் முன் பின் தொடர்ச்சி உள்ளது. இடையில் உள்ள கல்வெட்டுத் துண்டு காணப்படவில்லை )

1) ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் . . . . . . . ரில் திருநாமத்
2) துக் காணியாய் தேவதா . . . . . . . ஙி க்கு வேலி ஒ
3) ன்றுக்கு ஒட இப்படி கெ . . . . . . . குறுணி இதில்
4) கார் முதல் நெல்லு மு . . . . . . . நெல்லு இரு
5) பத்து ஐங்கலனே . . . . . . . நாற்பத்தொ

**க. எண் : 7 கருவறை தெற்கு அதிட்டானம் - ஜகதிக்கு மேல் உள்ள பட்டி (முந்தைய கல்வெட்டின் தொடர்ச்சியாக இருக்கலாம்.)**

1) சதுர்வேதி மங்கலத்து ஒட்டுத் தாழ்வில் பத்திலிரண்டாய் முதல் கொண்ட நெல்லில் சேதியராயந் தந்த . . . . . . . . . . . கிலக்கைக்குங் கொற்றுக்குஞ் சிலவிட . . . . . நூற்றுப்பத்து முக்கலனே முக்குறுணி நானாழியும் பெருந் தனத்து . . . க்கிலக்கைக்குங் கொற்றுக்கும் . . . . . . . . . . . . .

2) பேதி மங்கலத்து சோமனாத தேவற் கிவ்வூரில் திரு நாமத்துக் காணியாய் இறுத்து வருகிற பிராமணப் பற்று ரூ மூன்றே முக்காலே காணி அரைக்காணிக்கு தரப்படி ௨ இருநூற்றறுபத்தறு கலனே இரு தூணி ஒரு நாழியும் வெள்ளான் பற்று ரூ ஆறு மாக்காணி முந்திரிகை . . . . . . . தரப்படி ௨ ஐம்பத்தொன்பதின் கலனே . . . .

## 10 மயில் மீது நடனம் புரியும் முருகன் சிற்பம்

*ச. கிருஷ்ணமூர்த்தி*
தொல்லியல் அலுவலர்
சிதம்பரம்

சங்க இலக்கியங்களில் குரவைக் கூத்து, வேலன் வெறியாடல், வள்ளிக்கூத்து ஆகிய கூத்துகள் முருக வழிபாட்டுடன் தொடர்புடைய கூத்துகளாகக் குறிப்பிடப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் முருகன் ஆடிய கூத்துகள் குறிப்பிடப்படுகின்றன. சூரபன்மனை வென்றபின் துடி எனும் உடுக்கையை இசைத்து நடனம் ஆடினான் என்றும், தாரகன் தலைமையில் போரிட்ட அவுணர்களை வென்றபோது குடையைப் பக்கங்களில் சாய்த்து நடனமாடினான் என்றும் பழமரபுக் கதைகள் குறிப்பிடுகின்றன. அருணகிரிநாதர் (கி.பி. 14 - 15-ஆம் நூற்றாண்டு) சிதம்பரம் பற்றிய தமது திருப்புகழில்,

''சதிமுழவு பலவும் இரு பக்கத்து இசைப்ப முது
சமய பயிரவி இதயம் உட்கி ப்ரமிக்க உயர்
தணிகை மலை தனில் மயிலின் நிர்த்தத்தில்
நிற்க வல பெருமாளே''

என்று குறிப்பிடுகிறார். (திருத்தணிகை மலையைக் குறிப்பிட்டாலும் சிதம்பரம் முருகனையே பாடுகிறார்) இப்பாடலுக்கு அடிப்படையாக அமைந்ததெனக் கருதத்தக்க சிற்பம் ஒன்று அண்மையில் கண்டறியப்பட்டது. (இதன் நிழற்படம் இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கிறது.)

சிதம்பரம் நடராசர் கோயிலுக்கு மேற்கில் சிங்காரத்தோப்பு எனத் தற்போது வழங்கப்படும் இடத்தில் திருக்களாஞ்செடியுடைய மகாதேவர் கோயில் உள்ளது. இக்கோயில் தற்போது பீமேசுவரர் கோயில் என்று வழங்கப்படுகிறது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் மூலம் இக்கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டதென அறிகிறோம். மேலும் இப்பகுதியில் திருக்களாஞ்செடியுடைய மகாதேவர் கோயில் தவிர, திருத்தொண்டத்தொகை ஈஸ்வரமுடையார் கோயில், அருள்மொழி ஈஸ்வரமுடையார் கோயில் என்ற இரு கோயில்களும் இருந்தன எனக் கல்வெட்டுகளால் தெரியவருகிறது. கி. பி. 1168-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில், அருள்மொழி ஈஸ்வரமுடையார் கோயிலிலிருந்த சுப்பிரமணியர் சன்னதி குறிப்பிடப்படுகிறது.

பீமேசுவரர் கோயில் அர்த்தமண்டபத்தின் உட்புறத்தில் வள்ளி தெய்வானை இருபுறமும் நிற்க, மயில்மீது நடனமாடும் நிலையிலான முருகன் சிற்பம் ஒன்று உள்ளது. இச்சிற்பத் தொகுதியே மேற்குறித்த சுப்பிரமணியர் சன்னதியில் இடம் பெற்றிருந்து, அக்கோயில் அழிந்தபின்னர் இங்கு கொணர்ந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். சிற்பத்தின் உருவமைதி கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்குரியதே.[1] ★

1. இப்பகுதியிலிருந்த சிதைந்துபோன கோயிலைச் சேர்ந்தனவாகக் கருதத் தகும் கோஷ்டச் சிற்பங்கள் (தட்சிணாமூர்த்தி) சேகரிக்கப்பெற்றுக் கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## குமிழியில் அரபு மொழிக் கல்வெட்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம் நவலூர் குட்டப்பட்டு என்ற கிராமத்தில் உள்ள ஏரியில் 250 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கற்குமிழி கண்டறியப்பட்டுள்ளது. குமிழிக்காக அமைக்கப்பட்ட இரு தூண்களில் ஒன்றில் 'பத்ரே ஆலம்' என அரபி எழுத்தில் கல்வெட்டு உள்ளது. கல்வெட்டில் ஹிஜிரீ ஆண்டு 1166, அரபி எண்களிலேயே காட்டப்பட்டுள்ளது. இதற்கு நேரான கி.பி. ஆண்டு 1746 ஆகும். பத்ரீ என்ற சொல்லுக்கு 'முழுமதி' என்பது பொருள். 'ஆலம்' என்ற சொல்லுக்கு 'உலகம்' என்ற பொருளாகும். இச்சொற்கள் ஹிஜீரா ஆண்டுக்குக் கீழ் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் கீழ்ப்பகுதியில் முழுநிலா ஒன்று சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. 'பத்ரே ஆலம்' என்ற பெரியவர் இந்நற்பணியைச் செய்துள்ளார் என்பது இக்கல்வெட்டினால் அறியப்படுகிறது. பல்லவர் காலம் தொட்டு ஏரிகளும் மடைகளும் அமைத்த செய்தி தமிழகத்தில் பல இடங்களில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. எனினும் 18-ஆம் நூற்றாண்டில் இசுலாமியப் பெரியவர் அமைத்த மடை பற்றிய செய்தி தற்போது கிடைத்துள்ளது சிறப்பாகும்.

தகவல் அளித்தவர் : திரு. சுபாஸ்சந்திரபோஸ்


கல்வெட்டு படியெடுக்க உதவியவர்கள் : க. ஈசுவரன், ப. பூபாலன், ஆகியோர்

கல்வெட்டினைப் படிக்க உதவியவர் : முனைவர் ஜெயப்புண்ணிசா, அரபுமொழிப் பண்டிதர், கீழ்த்திசைச் சுவடி நூலகம்.

கி. ஸ்ரீதரன்,
உதவி கல்வெட்டுக் கண்காணிப்பாளர்,
சென்னை.

கோவை மாவட்டம் சுண்டப்பாளையம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் பின்னமான நிலையிலிருந்த திருமால், நிலமகள், (பூதேவி) திருமகள் (ஸ்ரீதேவி) கற்சிலைகள், மேற்படி கோவிலின் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைச் செயல் அலுவலரால் தொல்லியல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. அக்கற்சிலைகள் தற்போது கோயம்புத்தூர் அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கோவை அகழ்வைப்பகத்திற்குக்



அறநிலையக் கொடை

**திருமால் :** ஸ்ரீநிவாச வரதராஜப் பெருமாள் என வழங்கப் படும் இச்சிற்பம் தலையில் கிரீடமகுடத்துடன் நின்ற நிலையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. பின்னிரு கரங்களில் சக்கரமும் சங்கும் காட்டப்பட்டுள்ளன. வல முன்கை அபயஹஸ்தமாகவும் இட முன்கை ஊரு ஹஸ்தமாகவும் உள்ளன.

**திருமகள் :** நின்ற நிலையில் கிரீட மகுடத்துடன் சித்திரிக்கப் பட்டுள்ளது. வலக்கை லோல ஹஸ்தமாகவும் இடக்கை மலரேந்திய நிலையிலும் உள்ளன.

**நிலமகள் :** நின்ற நிலையில் கிரீட மகுடத்துடன் சித்திரிக்கப் பட்டுள்ளது. வலக்கை மலரேந்திய நிலையிலும் இடக்கை லோல ஹஸ்தமாகவும் அமைந்துள்ளன. இச்சிற்பங்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகலாம்.

**பெ. கௌதமபுத்திரன்**
**தொல்லியல் அலுவலர்**
**கோவை**

## மாகறல் கள ஆய்வு

காஞ்சிபுரம் - உத்தரமேரூர் நெடுஞ்சாலையில் பாலாற்றின் வடகரையில் அமைந்துள்ள மாகறல், பாடல் பெற்ற சிவத்தல மாகும். இவ்வூரிலுள்ள மாகறலீஸ்வரர், மற்றும் பெருமாள் கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் முன்னரே படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளாகும். மாகறல் குடியிருப்புக்குச் சற்றுத் தொலைவில் விளை நிலங்களுக்கு இடையே சிதைந்த நிலையில் காணப்படும் சிவன் கோயில் அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டதாகத் தெரிய வில்லை. இக்கோயிலில் சோழர் காலத்தவை எனக் கூறத்தக்க சிற்பங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இவ்வூரின் இடுகாட்டை அடுத்து, சிவலிங்கம், நந்தி ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்ட கல் தூண்கள் கல்வெட்டுடன் உள்ளன. தொல்லியல் துறைக் கல்வெட்டுப் பயிற்சி மாணவர் திரு **நா. சுப்பிரமணியன்** தமது கள ஆய்வில் இவற்றைக் கண்டறிந்துள்ளார். கல்வெட்டுகள் தொல்லியல் துறையால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

## கொங்கு நாட்டில் நிகமம்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் அமைந்துள்ள கொடுமணலில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தினரால் நடத்தப் பட்ட அகழாய்வில் ‘‘நிகமம்’’ என்று தமிழ் பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்ட பானையோடு ஒன்று கண்டறியப்பட்டது. ‘‘வணிகக்குழு’’ என்பதே இச்சொல்லின் பொதுவான பொருளாக இருப்பினும், பதிற்றுப்பத்தில் ‘‘நியமம்’’ என்று குறிப்பிடப்படும் இடப்பெயரோடு இதனைத் தொடர்பு படுத்தலாமோ எனத் தோன்றுகிறது. கொங்கு நாட்டில் வரலாற்றுக் காலம் முதல் விலை மதிப்பு மிக்க ஆபரணக் கல்மணிகள் கிடைத்து வருகின்றன. கல்மணி வியாபாரம் தொடர்பான நிகமமாகக் கொடுமணல் இருந்திருக்கலாம். அல்லது மு. ஆரோக்கியசாமி அவர்கள், பதிற்றுப் பத்தில் குறிப்பிடப்படும் நியமத்தோடு தொடர்புபடுத்தும் பொள்ளாச்சி நிகமமாகவோ, சத்தியமங்கலத்துக்கு அருகிலுள்ள இக்கரை நெகமம், அக்கரை நெகமம் ஆகிய ஊர்களுள் ஒன்றாகவோ இந்நிகமத்தை அடையாளம் காட்டலாம்.

**பெ. கௌதமபுத்திரன்**
தொல்லியல் அலுவலர்
கோயம்புத்தூர்

## தருமபுரி அகழ்வைப்பகத்திற்குக் காசு சேகரிப்பு

தருமபுரி மாவட்டத்தில் நவலை என்ற ஊரில் முன்னரே 300 க்கும் மேற்பட்ட அச்சு குத்தப்பட்ட வெள்ளிக் காசுகள் (Silver punch marked Coins) கிடைத்துள்ளன. இவை கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

தற்போது தருமபுரி மாவட்டம் அரூரைச் சேர்ந்த வனத்துறை ஊழியர் அன்சர் என்பவர் தாம் சேகரித்த பழங்காசுகள் சிலவற்றைத் தருமபுரி அகழ்வைப்பகத்திற்கு வழங்கியுள்ளார். இவற்றுள் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறிஞர்களால் கருதப்படும் செப்புக் காசு ஒன்றும் உள்ளது. இது 2 செ.மீ. நீளமும் 1 செ.மீ. அகலமும் 0.5 செ.மீ. கனமும் கொண்ட செவ்வக வடிவிலமைந்த அச்சு குத்தப்பட்ட காசு ஆகும். இக்காசின் ஒருபுறம் மலை, நிலவு போன்ற குறியீடுகளும் மறுபுறம் சிறிய வட்டங்களும் காணப் படுகின்றன.

**ச. செல்வராஜ்**
தொல்லியல் அலுவலர்
தருமபுரி

## நுண்கற் கருவிகள் கண்டுபிடிப்பு

செங்கல்பட்டு ஊரின் வடகிழக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அமணம்பாக்கத்தில் இந்திய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறை, முன்னரே பெருங்கற் படைக்காலத்தைச் சேர்ந்த தொப்பிக்கல் (capstone), நெடுங்கல் (menhir) முதலிய ஈமச்சின்னங்களைக் கண்டறிந்துள்ளது. அண்மையில் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் திரு. ஜெனு என்பவருடன் இணைந்து என்னால் கள ஆய்வு செய்யப்பட்டதில், இவ்வூர் மலையின் கிழக்குப்பகுதியில் உள்ள பாறையிடுக்குகளில் நுண்கற் கால அல்லது குறுணிக்கற்காலக் கருவிகள் (microlithic tools) சில கண்டறியப்பட்டன. கி.மு. 4000 முதல் கி.மு. 800 வரையிலும் அதன் பின்னர் பெருங்கற்படைக் காலமாகிய இரும்பு யுகம் அறிமுகமான பின்னர் சிறிது காலமும் இப்பண்பாடு மக்களிடையே நிலவியுள்ளது எனத் தெரிகிறது.

**க. சக்திவேல்**
கல்வெட்டுப் பயிற்சி மாணவர்

## நொடியூர்க் கல்வெட்டு

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை வட்டம் நொடியூரிலுள்ள சிவன் கோயிலின் கருவறை வடசுவரில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு அண்மையில் கண்டறியப்பட்டுப் படிக்கப் பட்டது. இக்கல்வெட்டு கி. பி. 15 - 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம். தொண்டை மண்டலத்து ஆத்துப்பாக்கம் என்ற ஊரைச் சேர்ந்த ஊருடையார் வென்று மாலையிட்டார் என்பவர் நந்தவனம் அமைத்ததைக் குறிப்பிடுகிறது

''தொண்டைமண்டலம் ஆத்துப்பாக்கம் ஊருடையார் வென்று மாலை இட்டார் தன்மநந்தவனம்'' என 6 வரிகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

**ரெ. புண்ணியமூர்த்தி**
கல்வெட்டு பயிற்சிப் மாணவர்

## கந்தப் பொன்னியம்மன் கோயில் கல்வெட்டு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிக்கு வடகிழக்கே 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொடூரில், கந்தப் பொன்னியம்மன் ஆலயம் உள்ளது. இக்கோயிலின் முகமண்டபத் தளத்தில், கி. பி. 1891-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. 36 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டின் வாசகம் வருமாறு :

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டனாயகியாகிய தொடுவூர் கிராமதேவி கந்த பொன்னியம்மன் திருச்சன்னதி கட்டடம் வர்த்தமான கலியுகாதி ஸ்ரீ ௪௯௯௨ விக்கிரம சக ஸ்ரீ ௧௯௪௭ சாலிவாகன ஸ்ரீ ௧௮௧௪ இங்கிலீஷ் ஸ்ரீ ௧௮௯௧ பிரபவாதி உருக்கு செல்லா நின்ற கர ஸ்ரீ தை மீ தொடுவூர் கிராமத்தாராகிய அக்கினி வம்ச சத்திரியர்களுடைய பரம்பரை[1] வீரமலை நாயகர் வீர பெருமாள் நாயகர் வேங்கட நாயகர் சவாதிப்ப நாயகர் அவர்களுடைய சந்ததி கைய்ங்கர்ய தர்மம்.

1. வன்னியர் என அழைக்கப்படும் சாதியினர்.

**கு. குமாரவேல்**
கல்வெட்டுப் பயிற்சி மாணவர்

# ஞாயிறு கற்சிலைகள்

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் வட்டத்தில் சோழவரத்தி லிருந்து 10 கி.மீ. தொலைவில் ஞாயிறு என்ற ஊர் உள்ளது. இவ்வூர், தேவார நாயன்மாராகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவியருள் ஒருவரான சங்கிலி நாச்சியாரின் ஊராகும். ஞாயிறு கிராமத்தில் ஊராட்சி தொடக்கப்பள்ளியின் கட்டடப் பணிகள் நடைபெறுகையில் கற்சிலைகள் 2 கண்டறியப்பட்டதாக நாளிதழ் களில் செய்தி வெளியானதையடுத்து, தொல்லியல் துறை ஆணையர் அவர்களின் ஆணைப்படி சென்னை தொல்லியல் அலுவலர் திரு. இரா. செல்வராஜ் அவர்களால் அச்சிற்பங்கள் ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வில் அவருடன் இணைந்து என்னாலும் பங்கேற்கப்பட்டது. இச்சிற்பங்கள் யோகநரசிம்மரும், லட்சுமி நரசிம்மரும் என அறியப்பட்டன. இவை கி. பி. 16-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த சிற்பங்களாக இருக்கலாம். யோகநரசிம்மர் சிற்பத்தின் பின்புறம் 16 கரங்களுடன் கூடிய சக்கரத்தாழ்வார் (திருமாலின் சக்ராயுதம்) சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. நரசிம்மரின் உக்கிரத்தைச் சூலதேவராகிய சிவபிரான், 16 கைகள் கொண்ட சரபர் வடிவம் தாங்கி அடக்கியதாகச் சைவர்கள் கூறுவர். நரசிம்மரின் சக்கரப்படையே சரபரை விட வலிமை வாய்ந்தது எனக்காட்டுவதற்காகச் சக்கரத்தாழ்வாரையும் 16 கரங்களுடன் வைணவர்கள் வழிபட்டிருக்கலாம். சக்கரத்தாழ்வார் வழிபாடு, தஞ்சை மராட்டியர்களால் பெரிதும் போற்றப்பட்ட வழிபாடு என்பது குறிப்பிடத்தக்கது.

ஏ. கோவிந்தராஜ்
கல்வெட்டுப் பயிற்சி மாணவர்

# பொது மக்களுக்கும்
# வரலாற்று ஆர்வலர்களுக்கும்
# தொல்லியல்துறை ஆணையர் அறிவிப்பு

"நீர்ப்பிழை புரிதல் ஊர்ப் பிழைத்தற்றால்
நெடுமுடி மன்னவன் கடுஞ்சினங் கொள்ளும்"

என்பது பாண்டியர் காலக் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்படும் பழம்பாடல் வரியென்றும், பொதுக் குளங்கள், நீர்நிலைகள் ஆகியனவற்றைச் சிதைப்பது ஊரையே சிதைப்பதற்குச் சமம் என்பதால் அவ்வாறு சிதைப்பவர்களை அரசன் கடுஞ்சினம் கொண்டு தண்டிப்பான் என்பது இதன் பொருள் என்றும் நாமக்கல் கவிஞர் அமரர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் "தாயார் தந்த தனம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். நீரின் இன்றியமை யாமையை உணர்ந்த நம் முன்னோர் வறட்சி தாக்காமல் இருப்ப தற்காக ஏரி-குளங்களை வெட்டுவித்ததோடு சந்திர சூரியர் உள்ள வரை அவற்றைப் பராமரிப்பதற்கு மானியங்கள் வழங்கி, அத்தகைய அறக்கொடைகளைக் கல்லிலும் செம்பிலும் பொறித்தும் வைத்தனர். மன்னர்களாலும் பொதுமக்களாலும் உருவாக்கப் பட்ட இத்தகைய நீர் ஆதாரங்கள் பராமரிக்கப்பட வேண்டும். ஏரி-குளங்களின் மடைகளில் பழங்காலக் கல்வெட்டுகள் இருப்பின் அக்கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட வேண்டும். தொல்லியல் சின்னங்களும் கல்வெட்டுகளும் நமது பொருளியல்-சமூகவியல் வரலாற்றிற்கான ஆதாரங்கள்; நம் பண்பாட்டின் அடையாளங்கள். உங்கள் பகுதிகளிலுள்ள அத்தகைய வரலாற்று ஆதாரங்களைப் பாதுகாத்திடவும், அவற்றின் சிறப்பினை வெளியுலகுக்குத் தெரிவித்திடவும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் தொடர்பு கொள்ளுங்கள். செப்பேடுகள், பழங்காசுகள், ஓலைச் சுவடிகள் ஆகியவை உங்களிடம் இருந்தால் அவற்றின் சிறப்பினை அறிந்து கொள்ளவும், வெளிப்படுத்தவும், வருங்காலத் தலைமுறைக் காக அவற்றைப் பாதுகாக்கவும் தொல்லியல் துறை உங்களுக்கு உதவும்.

**நீரின்றி அமையாது உலகு - அது போன்றே**
**தொல்லியல் ஆதாரங்கள் இன்றி அமையாது நம் வரலாறு.**

**ஆணையர்**
தொல்லியல் துறை, சென்னை-113

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை ஆணையர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் சார்பாகத் திரு. சீ. இராமச்சந்திரன், கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.